753/B2/21/2/23

விடுநர் தேதி :

K.சண்முகம் S/o V. கிஷ்டப்ப நாயக்கர் (CELL: 99409 59062)
மற்றும் K.N.முனுசாமி S/0. நடேச ரெட்டியார் (CELL: 90940 83411)
கிராம பொதுமக்கள் சார்பாக,
காரணி கிராமம்,
ஆரணி அஞ்சல் - 601 101,
கும்மிடிப்பூண்டி வட்டம்,
திருவள்ளூர் மாவட்டம்.

வட்டாட்சியர் அலுவலகம் Rs.10 21 FEB 2023 COURT FEE INDIA TEN RUPEES கும்மிடிப்பூண்டி

பெறுநர்

உயர்திரு. வட்டாட்சியர் அவர்கள்,
வட்டாட்சியர் அலுவலகம்,
கும்மிடிப்பூண்டி வட்டம், கும்மிடிப்பூண்டி,
திருவள்ளூர் மாவட்டம்.

வட்டாட்சியர் அலுவலகம் 21 FEB 2023 கும்மிடிப்பூண்டி

பொருள் : காரணி கிராமத்திலுள்ள எங்களுக்கு சொந்தமான விவசாய நிலங்களை அரசு எடுப்பதை கைவிடக்கோரி மனு.

ஐயா,

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம், எண்-39, காரணி கிராமத்தில் புஞ்சை அனாதீனம் மற்றும் நஞ்சை அனாதீனம் சர்வே எண்கள் 10/1, 10/2, 11/26, 15/1, 19/1, 19/3, 21/1, 21/3, 29/5, 29/6, 29/1, 29/2, 9/3, 29/2, 29/4, 29/10, 29/7, 17/1, 8/7, 8/9, 8/5, 8/6, 8/3, 8/4, 8/10, 14/1, 15/3, 38/1, 38/2, 40/2, 40/5, 40/6, 40/7, 40/8, 40/9, 45/9B ஆடங்கிய ரயத்துவாரி நிலங்கள் எங்கள் முன்னோர்களுக்கு சொந்தமாக இருந்து அவர்களின் காலம் முதல் எங்கள் சுவாதீனத்திலும் அனுபவத்திலும் இருந்து வருகிறது. மேற்படி நிலங்களை UDR பட்டா வழங்கிய காலத்தில் தவறுதலாக அனாதீனமாக கிராம கணக்குகளில் பதியப்பட்டுள்ளது. எங்கள் முன்னோர்கள் போதிய கல்வி அறிவு இல்லாத காரணத்தாலும், தொடர்ந்து எங்கள் கைப்பற்றிலும் சுவாதீனத்திலும் இருந்து வருவதாலும் அவர்களுக்கு இதைப்பற்றி தெரியாமல் போனது. மேற்படி நிலங்கள் இதுநாள் வரையில் எங்கள் கைப்பற்று சுவாதீன அனுபவத்திலிருந்து வரும் நிலங்களாகும். இந்த நிலங்களையும் அதில் செய்யப்படும் விவசாயத்தினை மட்டுமே நம்பி மேற்படி கிராமத்தில் சுமார் 113 பேரின் குடும்பங்களும் வாழ்ந்து வருகிறோம்.

தற்போது மேற்படி நிலங்களை அரசு தனது உபயோகத்துக்காக கையகப்படுத்த முயலுவதாக அறிகிறோம். ஏற்கனவே, இதுபோல எங்கள் நிலங்களை அரசு அண்ணா பல்கலைகழகத்துக்கு நிலம் எடுக்க முன்பு முயன்ற போதும், தமிழ்நாடு அரசு கால்நடை துறைக்கு பெயர் மாற்றம் செய்ய முயன்ற போதும் கிராம மக்களாகிய நாங்கள் போராடி அவற்றிலிருந்து மீண்டோம். எனவே, மேற்படி நிலங்களை அரசு கையகப்படுத்துவதை கைவிடக்கோரியும், மேற்படி நிலங்களுக்கு எங்களுக்கு பட்டா வழங்க கோரியும் தங்களை தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

இப்படிக்கு
கிராம பொது மக்கள்
காரணி கிராமம்

KK தேவராஜ்
[signature]
[signatures]